அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் : 02 /2017
தேதி : 10.1.2017

# பொங்கல் திருநாளை கட்டாய பொது விடுமுறை பட்டியலில் இருந்து நீக்கி அதன் முக்கியத்துவத்தை குறைத்திருப்பது உலக தமிழருக்கு வருத்தம் தரும் செயல்

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவன தலைவர் கண்டனம்

தமிழ் விவசாயிகளின் சொல்லொண்ணா துயரம், ஜல்லிக்கட்டிற்கு நீடிக்கும் தடை, சமீபத்தில் தமிழகம் கண்டிராத வறட்சி நிலைமை, வர்தா புயல் பாதிப்பு, பணத்தட்டுப்பாடு, மீனவர்கள் பாதுகாப்பின்மை, முதலமைச்சர் மரணம் என பல்வேறு வேதனை, சோதனை துயரங்கள் என்று ஒன்றன் பின் ஒன்றாக சந்தித்திருக்கும் தமிழகத்தை மேலும் பாதிக்கும் வகையில் பொங்கலை கட்டாய பொது விடுமுறை பட்டியலில் இருந்து நீக்கியிருப்பது வருந்தத்தக்கது.

காலங்காலமாய் நமது முன்னோர்கள் உழவர் திருநாளாக, தைத்திருநாளாக பொங்கல் திருநாளை மிக சிறப்பாக கொண்டாடி வந்திருக்கிறார்கள். பணி நிமித்தமாக வெளியூரில் இருக்கும் குடும்ப உறுப்பினர்கள், நகரத்தில் வளரும் இளைஞர்கள் பெரும்பாலும் இந்த பொங்கல் பண்டிகையின்போதுதான் ஒன்று சேர்ந்து நமது பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்கிறார்கள். குடும்பங்கள் ஒன்று சேரவும், இந்த திருநாளை ஒட்டிய பல்வேறு நிகழ்ச்சிகளால் கிராமங்களில் ஒற்றுமை மேலும் உறுதி செய்யவும் பொங்கல் பண்டிகை பெரிதும் காரணமாக இருக்கிறது.

தமிழனுக்கு இருக்கும் பண்டிகைகளில் பொங்கல் பண்டிகை போன்றதொரு சிறப்பான பண்டிகை வேறொன்றும் இல்லை, என்னும் உண்மை பிரதமருக்கு தெரியவில்லை என்றால், பாரதீய ஜனதா கட்சியை சேர்ந்த தமிழ் தலைவர்கள் தை திருநாளின் முக்கியத்துவத்தை மத்திய அரசுக்கு உணர்த்தி, உடனடியாக கட்டாய பொது விடுமுறை பட்டியலில் சேர்க்குமாறு என் சார்பிலும், சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் தமிழக மக்களின் சார்பிலும் வலியுறுத்தி கேட்டு கொள்கிறேன்.

இந்து கலாச்சார பண்டிகையான தீபாவளி பண்டிகையை வெள்ளை மாளிகையில் கொண்டாட ஒபாமா தயங்கவில்லை. ஆனால் வாழையடி வாழையாய் கொண்டாடப்பட்ட தமிழர்களின் திருநாள் அவர்களது பெருமை மிகு அடையாளமான இந்த நாள் கொண்டாட கட்டாய பொது விடுமுறையாக அறிவிக்க மத்திய அரசுக்கு ஏன் தயக்கம் என்று தெரியவில்லை.

உடனடியான இந்த முடிவை மாற்றி, கட்டாய பொது விடுமுறையாக அறிவித்து, ஜல்லிக்கட்டிற்கு இருக்கும் தடையை நீக்க ஏற்பாடு செய்து இனிய பொங்கலை தமிழர்களுக்கு பரிசாக அளிக்குமாறு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,



**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்